# இலங்கை இனப்பிரச்சினைக்கு 13 ஆம் திருத்தமே நிரந்தரத் தீர்வு! – அண்ணாமலை வலியுறுத்தினார்



இலங்கை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கடமை இந்தியாவுக்கு உள்ளது என்பதை பிரதமர் நரேந்திர மோடி இந்தியத் தலைவர்களுக்குத் தெளிவுப்படுத்தியுள்ளதாக பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அண்ணாமலை, பிரித்தானிய நாடாளுமன்றத்தில் உள்ள ஹவுஸ் ஒப் லோர்ட்ஸ் அரங்கத்தில் பிரித்தானியத் தமிழ்சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பங்கேற்றிருந்தார்.

இந்தியாவும், இலங்கையும் மிகத் தொன்மையான நாகரிகத் தொடர்பு உடையவை. 1987 ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டுப் போரில் தமிழர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். அதன் பிறகு ஏற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட நடவடிக்கைகள் இது வரை முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை.

2009 ஆம் ஆண்டு, வரலாற்றிலேயே மிகத் துயரமான ஆண்டாக அமைந்தது. அதற்கு முக்கியப் பொறுப்பு, அன்றைய காங்கிரஸ்

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 14 புதன்கிழமை 28.06.2023 கதிர் 13

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

## வங்கி விடுமுறை பற்றி வீண் அச்சம் வேண்டாம் ஜனாதிபதி ஆலோசகர் அகிலவிராஜ் தெரிவிப்பு

மக்களின் வைப்புத் தொகையில் எவரும் கைவைக்க முடியாது என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐந்து நாட்கள் தொடர்ந்து வங்கி விடுமுறை வழங்குவது தொடர்பில் நாட்டில் தேவையற்ற கருத்தியல் உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகவோ, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாகவோ எவரும் அச்சமடையத் தேவையில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் தெளிவாகக் கூறியுள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட அஸ்வெசும போன்ற திட்டங்களை அரசியல் நிகழ்ச்சி நிரல்களில்



உள்ளடக்கக் கூடாது. அனைத்தும் நியாயமான முறையில் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும், என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## யாழ் - கொழும்பு ரயில் சேவை மீண்டும் விரைவில் ஆரம்பம்!

இடைநிறுத்தி வைக்கப்பட்ட கொழும்பு - யாழ்ப்பாண ரயில் சேவையை அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிக்கையொன்றில் அறிவித்துள்ளது.

வடக்கு ரயில் மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற திருத்தப் பணிகள் காரணமாக கடந்த ஜனவரி 5 ஆம் திகதி முதல் கொழும்புக் கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான நேரடி ரயில்சேவையானது அநுராதபுரம் ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் மஹவ முதல் ஓமந்தை வரையிலான தொடருந்துப் பாதை புனரமைக்கப்படத் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போதைய நிலையில், அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையிலான தொடருந்துப் பாதை முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

எனினும், அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான தொடருந்துப் பாதையின் புனரமைப்புப் பணிகள் மழை காரணமாக அடுத்த வருட ஜனவரி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே கொழும்பு முதல் யாழ்ப்பாணம் வரையிலான தொடருந்துச் சேவையை மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கிளிநொச்சியில் துப்பாக்கிச்சூடு!



கிளிநொச்சி - உதய நகர் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். காரில் பயணித்தவர்களை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த 38 வயதான நபர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களைக் கைத செய்வதற்கான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு தொடர் வங்கி விடுமுறையால் பாதிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாத்திரமல்ல இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கூறுவது கூட நேர்மையானதாக இல்லை, என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

அரச வங்கிகளை வங்குரோத்து அடையச் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மூன்று நாட்களுக்கு மேல் வங்கிகளுக்கு விடுமுறை வழங்குவதால், சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும். சாதாரணமாக மூன்று நாட்களுக்கு மேல் வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்படுவதில்லை. எனினும் அரசாங்கம் இந்த சம்பிரதாயத்தை மீறியுள்ளது.

வங்கி விடுமுறை தினம் அல்லாத 30 ஆம் திகதியை வங்கி விடுமுறை தினமாக அறிவித்து

3 ➤

## மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளில் ஒரு தொகுதி நீதிமன்ற அதிகாரிகள் முன்னிலையில் இன்று கையளிப்பு!



மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம் - திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய ஒருவர் கையாடிச் சென்றதன் காரணமாகத் தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களில் 20 பேருக்கு, அவர்களது நகைகள் உயர் நீதிமன்றப் பதிவாளர் உட்பட்ட நீதிமன்ற அதிகாரிகள் முன்னிலையில் மீள வழங்கப்பட்டுள்ளன.

(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## யாழில் ஐஸ் போதைப்பொருள் நுகர்ந்த இளைஞர் ஒருவர் சாவு



யாழ்ப்பாணத்தில் அதிகளவான ஐஸ் போதைப் பொருளை நுகர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த குறித்த இளைஞர், ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த நிலையில் அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அவர் சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆயினும், அவரைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகள் பயனளிக்காது, அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# பொத்துவிலில் ஓட்டோ சாரதிகள் ஆர்ப்பாட்டம்!




சுற்றுலாத்துறைக்குப் புகழ்பெற்ற பிரதேசமான பொத்துவில் - அறுகம்பை பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் நீர்ச் சறுக்கல் படகுகளை ஏற்றிச் செல்வதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று இடம்பெற்றது.

அறுகம்பை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் இன்று காலை அறுகம்பை பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு பேரணியாக பொத்துவில் பிரதேச செயலகம் வரை சென்றனர்.

சுற்றுலாப் பயணிகளின் நீர்ச் சறுக்கல் படகுகளை மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிச் செல்வதற்காக அவற்றின் உரிமையாளர்கள் வியாபார நோக்கோடு வாடகைக்கு விடுகின்றனர். இதனால், சுற்றுலாத்துறையை மாத்திரம் நம்பி ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வரும் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க ஓட்டோ சாரதிகள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை, என்று ஓட்டோ உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனாலேயே, போக்குவரத்துப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் வகையில் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள்களில் பொருத்தப்பட்டிருக்கும் நீர்ச் சறுக்கல் படகுத் தாங்கிகளை அகற்றி, வீதி விபத்துக்களிலிருந்து சுற்றுலாப் பயணிகளையும் மக்களையும் பாதுகாத்து, தமது வாழ்வாதரத்தை மேற்கொண்டு செல்வதற்கும் பொலிஸார் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்வேண்டுமெனக் கோரிய மகஜர் ஒன்றையும் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

## செல்வச் சந்நிதி ஆலய ஆடிக்குளிர்த்திப் பொங்கல் கடல் நீரில் விளக்கெரிக்கும் சம்பிரதாயம் ஆரம்பம்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஆடிக்குளிர்த்திப் பொங்கல் வைபவத்தை முன்னிட்டு முருகப்பெருமானுக்கு கடல் நீரில் விளக்கு எரிக்கும் வைபவம் வருடாவருடம் இடம்பெற்று வருகிறது.

இந்த வருட ஆடிக்குளிர்த்திப் பொங்கலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னரான காலத்தில் முருகப்பெருமானுக்கு விசேட பூசைகள் நடாத்தப்பட்டு நள்ளிரவில் ஆலயப் பூசகர்கள் பெருங்கடலும் தொண்டைமானாற்று வாவியும் இணையும் இடத்திற்குச் சென்று, வெள்ளைத் துணியினால் வாய் கட்டப்பட்ட மண் குடத்தில் கடல் நீர் எடுத்து வந்து விசேட பூசை வழிபாடுகள் நடாத்தி ஆலய மூலஸ்தானத்தில் வைத்து வழிபாடுகள் நடத்துவர்.



இந்த வழமைக்கு அமைய, எதிர்வரும் திங்கட்கிழமை வரையான ஒரு வார காலத்திற்கு கடல் நீரில் விளக்கெரித்துப் பொங்கல் பொங்கும் சம்பிரதாயபூர்வ வைபவம் நேற்றுமுன்தினம் இரவு பெருங்கடலுக்குச் சென்று கடல் நீர் எடுத்து வந்து விளக்கு எரியவைத்ததோடு ஆரம்பமாகியுள்ளது.

## முதியவர்களிடையே காசநோயைக் கண்டறிதல் அம்பாறையில் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது

(நூருல் ஹுதா உமர்)

முதியவர்களிடையே காசநோயைக் கண்டறியும் முயற்சியில், அம்பாறை மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி டொக்டர். ஏ.எல். அப்துல் கபூரால் மாவட்ட மார்பு சிகிச்சை மையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பயிற்சி நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் கலந்து கொண்டு இந்த அமர்வு முழுவதும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார். வீட்டில் இருக்கும் முதியோர்களுக்கான சுகாதாரம் என்ற தலைப்பில் டொக்டர் ஏ.எச்.




எம். டி.மபாஸ் விளக்கவுரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவர்கள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## இந்துக்கல்லூரிகளின் விவாதப் பெருஞ்சமர் 30ஆம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரி பங்குபற்றும் இந்துக்களின் விவாதப் பெருஞ்சமர் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை 6.30 மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஐ.எம்.எப்.பின் பரிந்துரைகளைப் பின்பற்றுமிடத்து, இலங்கையானது பொருளாதார ஸ்திரத்தன்மையை அடையும் எனும் வாதம் ஏற்புடையது- என்று ஓர் அணியும், இல்லை.- என்று மற்றைய அணியும் வாதிடவுள்ளன.

## இலங்கை இனப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுதான். தனது கடமைகளில் இருந்தும், இலங்கைப் போரைத் தடுக்க வேண்டிய பொறுப்புகளில் இருந்தும் தவறியமை காங்கிரஸ் கட்சி செய்த மன்னிக்க முடியாத தவறுகளாகும்.

2014 ஆம் ஆண்டுக்குப் பிறகே, பிரதமர் மோடி இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்வில் புதிய நம்பிக்கையை உருவாக்கினார். இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய வரலாற்றுக் கடமை இந்தியாவுக்கு உள்ளது என்பதைப் பிரதமர் மோடி மனமார உணர்ந்திருந்தார். கடந்த 9 ஆண்டுகளில், இலங்கையில், தமிழர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இந்திய அரசு செய்துள்ள பணிகள் ஏராளம்.

இலங்கையின் வடகிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில், இந்திய அரசு தமிழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறது. கொழும்புடன், யாழ்ப்பாணத்தை இணைக்கும் ரெயில் போக்குவரத்தை அமைத்துள்ளது மோடி தலைமையிலான அரசு.

காரைக்கால், காங்கேசன்துறைக்கு இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்க இருக்கிறது. மிகவும் அபாயகரமான வீதத்தில், இந்து சமயத்தைப் பின்பற்றும் மக்கள் தொகை அங்கே குறைந்து கொண்டே வருகிறது. புவியியல் மாற்றமானது, இலங்கையின் வடகிழக்கு பகுதியின் கலாசாரத்தைப் பாதிக்கும். இது பாதகமான விளைவாகும்.

மத்திய மலையகப் பகுதியிலிருந்து செந்தில் தொண்டமான் என்ற ஒரு தமிழரை, புதிய ஆளுநராக நியமித்துள்ளனர். அவரது நியமனம் தமிழ் மக்களின் பெரும்பாலான முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் 13 ஆம் சட்டத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்று பிரதமர் மோடி தனது இலங்கைப் பயணத்தின்போது வலியுறுத்தினார். தமிழக பா.ஜ.க. சார்பிலும், இலங்கையில் நிரந்தரத் தீர்வுக்காக மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

உலகளாவிய அரசியல், சீன அரசு இலங்கையில் மேற்கொண்டுள்ள முதலீடுகள், கடன் உதவி உள்ளிட்டவை இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தாமதப்படுத்தலாம். இலங்கை, உலக நாடுகளின் அதிகாரப் போட்டியில் பலியாகி விடக்கூடாது என்பதிலும் இந்தியப் பிரதமர் மிகவும் கவனமாக இருக்கிறார், என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள்
பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளில் ஒரு தொகுதி நீதிமன்ற அதிகாரிகள் முன்னிலையில் இன்று கையளிப்பு!



மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம் - திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய ஒருவர் கையாடிச் சென்றதன் காரணமாகத் தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களில் 20 பேருக்கு, அவர்களது நகைகள் உயர் நீதிமன்றப் பதிவாளர் உட்பட்ட நீதிமன்ற அதிகாரிகள் முன்னிலையில் மீள வழங்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்களில் ஒரு தொகுதியினருக்கு நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக நகைகளை மீளளிக்கும் நிகழ்வு இன்று மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே.கோடீஸ்வரன் தலைமையில் திருநெல்வேலிக் கிளையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், மக்கள் வங்கியின் கிளை வலையமைப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ. சூரியகுமார, பிராந்திய சட்ட அதிகாரி திருமதி எஸ்.சுகாஸ், பல்கலைக்கழகக் கிளை முகாமை யாளர், திருநெல்வேலிக் கிளை முகாமையாளர், உயர் நீதிமன்றப் பதிவாளர் உட்பட்ட நீதிமன்ற அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களில் 20 பேருக்கு முதற்கட்டமாக நகைகள் மீளளிக்கப்படுவதாகவும், மீதமுள்ளவர்களுக்கு அடுத்துவரும் வாரங்களில் படிப்படியாக நகைகள் மீளளிக்கப்படவுள்ளன, என்றும் வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அடகு நகை மோசடி 2012 இல் இடம்பெற்றது. மக்கள் வங்கி திருநெல்வேலி வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் தமது நகைகளை அடகு வைத்த பலர் இதனால் பாதிக்கப்பட்டிருந்தனர். எனினும், கடந்த ஜனவரி மாதம் வரை வங்கி அதிகாரிகள் எவரும் இது குறித்து வாடிக்கையாளர்களுக்காக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின் பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர், திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர் ஆகியோரின் அழைப்பின்பேரில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ. சூரியகுமார, பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுடன் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார். 11 வருடங்களின் பின் வங்கியின் சார்பில் வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாதக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக அந்த நகைகளை மீளக் கையளிப்பதில் தடங்கல் ஏற்பட்டிருந்ததாக வங்கித் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்வருட ஆரம்பத்தில் இந்த ,மாவட்ட நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்ட நிலையில் வங்கியின் சமர்ப்பணத்துக்கு அமைய நிபந்தனைகளுடன் நகைகளை மீளளிப்பதற்கு உயர் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தொட்டிலில் கழுத்து இறுகி 9 வயது சிறுவன் உயிரிழப்பு!

## நாவலப்பிட்டியில் சோகம்

சேலைத் தொட்டிலில் கழுத்து இறுகி 9 வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். இந்தத் துயரச் சம்பவம் நாவலப்பிட்டி, மொன்றி கிறிஸ்ரோ தோட்டத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த சிறு குழந்தைக்காகச் சேலையில் கட்டப்பட்டிருந்த தொட்டிலில் குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# முதல் முறையாக பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படும் பேராதனைப் பல்கலைக்கழகம்!

இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகம் வரலாற்றில் முதல் தடவையாக பொதுமக்கள் பார்வையிடுவதற்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி சனிக்கிழமையன்று பொதுமக்களின் பார்வைக்காக, வரலாற்றில் முதன்முறையாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் திறக்கப்படவுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் கண்காட்சிகளைப் பார்வையிடுவதோடு, இசை, நடனம், பாடல் மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் என்பவற்றையும் கண்டுகளிக்கலாம்.

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், மற்றும் மாணவர்களையும் சந்தித்து, அவர்களுடன் உரையாடவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டங்கள் வழங்கும் பல்வேறு துறைகள் மற்றும் பாடநெறிகள் தொடர்பாக அறிந்து கொள்ளவும் பொதுமக்களுக்கு இது ஒரு அரிய வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஜூன் 30 - விசேட விடுமுறை

*எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது.*

*நாளை மறுதினம் 29 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள ஹஜ் பெருநாளை முன்னிட்டு இந்த விடுமுறை வழங்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.*

*குறித்த விடுமுறை தினத்துக்குப் பதிலாக அடுத்த மாதம் 8 ஆம் திகதி நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளும் இயங்கும் என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.*

# கிளிநொச்சி விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டம்!

நெல்லுக்கான விலையினை அரசாங்கம் உரிய நேரத்தில் அமுல்படுத்துவதில்லை, எனத் தெரிவித்து கிளிநொச்சியில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணியளவில் நெல் சந்தைப்படுத்தல் நிலையம் முன்பாக ஆரம்பமான குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி, கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது. அங்கு மேலதிக அரசாங்க அதிபர் “ரீமோகனிடமும், நடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடமும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

தற்பொழுது நெல்லினை 48 தொடக்கம் 50 ரூபாய்க்கு கொள்வனவு செய்வதாகவும், அறுவடை முடிவில் வரவைவிட செலவு அதிகமாக இருப்பதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை, களஞ்சியச் சாலைகள் அனைத்துமே வெறுமனே காணப்படுவதாகவும், உரிய காலத்தில் உரிய விலையில் நெல் கொள்வனவு செய்யப்படுவதில்லை எனவும் நெல் சந்தைப்படுத்தல் சபையினரும் தெரிவித்துள்ளனர்.

# மருந்தாக்கல் சபையில் மோசடி உடனடி நடவடிக்கை வேண்டும்!

## சஜித் பிரேமதாச வலியுறுத்து



தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை யில் இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் உடனே நட வடிக்கை எடுக்க வேண்டும், என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் செயலாளர் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச ஔடதவியலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

தேசிய மருந்துகள் அதிகார சபை வினைதிறனுடன் செயற்பட வேண்டும் என்றும், இது தொடர்பான கண்காணிப்புக்களை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

# சர்வதேச வர்த்தகத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தமானி வெளியிடப்பட்டது. ஏன், இவ்வாறு வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்படுகிறது? என்பது வங்கியின் பிரதானிகளுக்கும் தெரியாது.

தேசியக் கடனை மறுசீரமைப்பது தொடர்பாக வங்கிகளின் பிரதானிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

பொருளாதாரத்தை வங்குரோத்து அடையச் செய்த அரசாங்கம் அதற்கு விடையைத் தேடுவதற்குப் பதிலாக மக்களுக்கு அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் உருவாக்கி, வங்கிக் கட்டமைப்பை வங்குரோத்து நிலைமைக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

நம்பிக்கையின் அடிப்படையில் வங்கிகள் இயங்கி வருகின்றன. வைப்புச் செய்துள்ளவர்கள், கடனைப் பெற்றவர்கள் என வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவர்களுடன் ஏற்படுத்த வேண்டிய நம்பிக்கைக்கு பதிலாக சந்தேகத்தை உருவாக்கினால், மக்கள் எதிர்ப்பை வெளியிடுவதைத் தவிர்க்க முடியாது.

வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள 5 நாட்களுக்குள் அவசரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டுகின்றனர். வரவு செலவுத்திட்ட விவாதங்களின் போதும் ஞாயிற்றுக் கிழமைகளில் நாடாளுமன்றம் கூட்டப்படுவதில்லை.

நாடாளுமன்றத்தைக் கூட்டி, கடனை இரத்துச் செய்யும் யோசனையை நிறைவேற்றுவதற்காகவே ஜனாதிபதி பிரான்ஸ் விஜயத்தை முடித்துக்கொண்டு வந்துள்ளார், எனவும் சுனில் ஹந்துன்நெத்தி கூறியுள்ளார்.

# பொலிஸ் பரிசோதகர் பஸ் மோதி உயிரிழப்பு

வாகன விபத்தில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பிரதான பரிசோதகர் இன்று காலை மகும்புர அதிவேக வீதி நுழைவாயிலுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாணந்துறையைச் சேர்ந்த ஜகத் சமிந்த பெரேரா என்ற 47 வயதுடைய, இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் பரிசோதகரை எதிரே வந்த பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மொங்கோலியாவில் பிளேக் நோய் தீவிரம் மாகாணமொன்று தனிமைப்படுத்தப்பட்டது



மொங்கோலியாவில் புபோனிக் வகை பிளேக் நோய் வேகமாகப் பரவி வருகிறது. இது யெர்சினியா பெஸ்டிஸ் என்ற பக்டீரியாவால் ஏற்படும் நோயாகும் என்றும், இதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கவில்லையெனில் பாதிக்கப்பட்டவர் 24 மணி நேரத்துக்குள் மரணத்தைத் தழுவக்கூடும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்த வைரஸ் பொதுவாக கொறித்து உண்ணும் விலங்குகளிடம் காணப்படுவதால், அங்கு அணில் வகையைச் சேர்ந்த மர்மோஸ் என்ற விலங்குகளை வேட்டையாடுவது குற்றம் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சட்ட விரோதமாக அதனைப் பலர் வேட்டையாடி உண்டு வருகின்றனர்.

அங்குள்ள 17 மாகாணங்கள் பிளேக் நோய் அபாயத்தில் உள்ளதாக நோய்களுக்கான தேசிய மையம் எச்சரித்துள்ளது. இந்த நிலையில் பிளேக் நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட கோவி-அல்டாய் என்ற மாகாணத்தைத் தனிமைப்படுத்தி உள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

## அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களில் வெப்ப அதிகரிப்பு - மக்களுக்கு எச்சரிக்கை




அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களில் வெப்பநிலை அதிகரித்துள்ளதால், மக்கள் நீர் நிலைகளை நோக்கிப் படையெடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் டெக்சாஸில் 38 பாகை செல்சியஸ் அளவில் வெப்பநிலை பதிவானதால், மக்கள் வீடு மற்றும் பொது வெளிகளில் உள்ள நீச்சல் குளங்களில் நேரத்தைச் செலவிடுகின்றனர்.

இதேவேளை, அரிசோனா, டெக்சாஸ், புளோரிடா உள்ளிட்ட மாகாணங்களில் ஜுலை 4 ஆம் திகதி வரை வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், டெக்சாஸில் உள்ள பிக் பெண்ட் தேசிய பூங்காவில் 119 பாகை பரனைட் வெப்பநிலையில் நடைப்பயணம் மேற்கொண்டிருந்த 14 வயது சிறுவன், அதிகரித்த வெப்பநிலையால் நீரிழப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐரோப்பாவை சென்றடைந்தது கனடாவின் காட்டுத்தீயின் புகை



கனடாவில் பரவிய காட்டுத் தீயின் புகைமண்டலம் வட அட்லாண்டிக் கடலைத் தாண்டி ஐரோப்பா வரை பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் 76 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் வரை பரவிய காட்டுத் தீயினால் மிக மோசமான விளைவுகள் பதிவாகும் எனவும், காட்டுத் தீ காரணமாக 160 மில்லியன் தொன் காபன் வெளியிடப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கோப்பர்நிகஸ் வளிமண்டல கண்காணிப்புச் சேவை தெரிவித்துள்ளது.

காட்டுத் தீ காரணமாக இந்த மாதத் தொடக்கத்தில் நியூயோர்க் நகரம் புகை மண்டலமாகக் காட்சியளித்த நிலையில், தற்போது வட அட்லாண்டிக் கடலைத் தாண்டி ஐரோப்பாவையும் அது அடைந்துள்ளது.

புகை அதிகளவில் இருந்தாலும் காற்றின் தரத்தில் அதனால் பெரியளவிலான பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என ஐரோப்பியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




## மின்சாரக் கார்களால் வீதிகளுக்கு இருமடங்கு சேதம்; ஆய்வில் தகவல்

பெட்ரோல், டீசல் கார்களை விட மின்சாரக் கார்களால் வீதிகள் இருமடங்கு சேதமடைவதாக இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது குறித்து, இங்கிலாந்தின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட ஆய்வில், ஏனைய வாகனங்களை மின்சாரக் கார்கள் சாலைகளில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இதனால், சாலைகளில் சிறிய அளவில் ஏற்படும் விரிசல்கள் எதிர்காலத்தில் பெரிய பள்ளங்களை உண்டாக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர, சமீபகாலமாக எஸ்யூவிக்கள் எனப்படும் அதிக நிறையுள்ள கார்களின் வருகையும் வீதிகளைப் பாதிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மின்சார வாகனங்களின் நிறை காரணமாக அடுக்கு வாகன நிறுத்துமிடங்கள் சேதமடையக் கூடும் எனவும், இடிந்து விழும் அபாயம் உள்ளதாகவும் நிபுணர்கள் எச்சரித்ததை அடுத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.



## உலகக் கிண்ணத் தகுதிகாண் தொடர் ஸ்கொட்லாந்தை வீழ்த்தியது இலங்கை

ஸ்காட்லாந்துக்கு எதிராக நேற்று இடம்பெற்ற உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று தொடரின் போட்டியொன்றில், இலங்கை அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சுப்பர் 6 சுற்றுக்குள் நுழைந்த அணிகளில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக பத்தும் நிஸங்க 75 ஓட்டங்களையும், சரித் அசலங்க 63 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

246 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய ஸ்கொட்லாந்து அணி, 29 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக கிறிஸ் க்ரீவ்ஸ் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் மஹீஷ் தீக்சன 3 விக்கெட்டுக்களையும் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

சுப்பர் 6 சுற்றில் நுழைந்துள்ள சிம்பாப்வே அணியைவிட ஓட்ட சராசரியை அதிகளவில் வைத்திருப்பதால், இரு அணிகளும் 8 புள்ளிகளைப் பெற்றிருந்தாலும், இலங்கையணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

# பிரதமர் மோடியிடம் கேள்வி எழுப்பிய பெண் பத்திரிகையாளருக்கு அச்சுறுத்தல்கள் எழுந்துள்ளமைக்கு வெள்ளை மாளிகை கண்டனம்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தின்போது பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் பத்திரிகையாளரான சப்ரினா சித்திக், மோடியிடம் எழுப்பிய கேள்வி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

"இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுவதாகவும், அரசை விமர்சிப்பவர்களை வாய் திறக்காமல் செய்வதாகவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. உங்கள் நாட்டில் உள்ள முஸ்லிம்கள் மற்றும் பிற சிறுபான்மையினரின் உரிமைகளை மேம்படுத்தவும், பேச்சுரிமையை நிலைநாட்டவும் நீங்களும் உங்கள் அரசாங்கமும் என்ன நடவடிக்கையை எடுக்க விரும்புகிறீர்கள்?" என்பது சப்ரினா சித்திக் கேட்ட கேள்வியாகும்.

அவரது கேள்விக்குப் பதில் அளித்த இந்தியப் பிரதமர் மோடி, எனக்கு நீங்கள் சொல்வது ஆச்சர்யமளிக்கிறது. இந்தியாவை ஜனநாயக நாடு என்று அழைக்கும் போது, அங்கு பாகுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தியாவில் அரசு வழங்கும் பலன்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக உள்ளன. சாதி, மத அடிப்படையில் இந்தியாவின் ஜனநாயகக் கொள்கைகளில் எந்தப் பாகுபாடும் காட்டப்படுவதில்லை.

உண்மையில் இந்தியா ஜனநாயக நாடு. அமெரிக்க அதிபர் பைடன் குறிப்பிட்டுள்ளபடி, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஜனநாயகம் என்பது நமது மரபணுவிலேயே உள்ளது. ஜனநாயகம்தான் நமது உத்வேகம். ஜனநாயகம் நம் நரம்புகளில்கூட ஓடுகிறது. ஆகவே நாங்கள் ஜனநாயகத்தில்தான் வாழ்கிறோம், என்று தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா, இந்தியப் பிரதமர் மோடியுடன் பேச வாய்ப்பு நேர்ந்தால் இந்தியாவில் உள்ள சிறுபான்மையின மக்களின் உரிமைகளை நீங்கள் பாதுகாக்கத் தவறினால், ஒரு கட்டத்தில் இந்தியா பிளவுபடத் தொடங்கிவிடும்!, என்று கூறுவேன் என உரையாடலின் முக்கிய பகுதியாக இருந்திருக்கும், என்று இருநாட்டுத் தலைவர்களதும் (மோடி - பைடன்) சந்திப்புக்கு முன் தெரிவித்திருந்தார்.

ஒபாமா கூறிய அதே கருத்தைக் கொண்ட கேள்வியையே பத்திரிகையாளர் சப்ரினா சித்திக் மோடியிடம் எழுப்பியதால் அவர் சமூக வலைத்தளங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறார். இந்தியாவின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் பத்திரிகையாளர் சப்ரினா சித்திக்கின் கேள்வி அமைந்துள்ளதாக ஒருசாரார் விமர்சித்தனர்.

பிரதமர் மோடியிடம் கேள்வி எழுப்பிய பத்திரிகையாளரை இப்படி விமர்சனம் செய்வதா?, என்ற பதில் கேள்வியும் மறுபுறம் எழுந்தது.

இந்த நிலையில் பத்திரிகையாளர் சப்ரினா சித்திக் மீதான பலமுனைத் தாக்குதலுக்கு வெள்ளை மாளிகை கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன்-பியர் கூறுகையில், ஊடகச் சுதந்திரத்திற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஒரு பத்திரிகையாளரை அச்சுறுத்தும் அல்லது துன்புறுத்தும் எந்தவொரு முயற்சியையும் கண்டிக்கிறோம்', என்று தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தின் கொள்கைகளுக்கு முரணானது மாகும் என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

தெற்காசியப் பத்திரிக்கையாளர்கள் சங்கமும் சப்ரினா சித்திக்குக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. டுவிட்டரில் அச்சங்கம் வெளியிட்ட பதிவில், பல தெற்காசிய மற்றும் பெண் பத்திரிகையாளர்களைப் போலவே, தனது வேலையைச் செய்ததற்காக மட்டுமே துன்புறுத்தலை அனுபவிக்கும் எங்கள் சக பத்திரிகையாளர் சப்ரினாவுக்கு நாங்கள் தொடர்ந்து எங்கள் ஆதரவைத் தெரிவிக்க விரும்புகிறோம், என்று தெரிவித்துள்ளது.

## பழனி ஆலயத்தில் கட்டப்பட்டிருந்த கட்டுப்பாட்டுப் பதாதையால் சர்ச்சை!




தமிழ்நாட்டில் பழனி முருகன் ஆலயத்தின் நுழைவு வாசலில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாதையால் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்துக்கள் மட்டுமே ஆலயத்திற்குள் நுழையலாம் என எழுதப்பட்ட பதாதை பழனி முருகன் ஆலயத்தின் முன் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை சமூக வலைத்தளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த திருக்கோவில் விஷ்வ ஹிந்து பர்ஷத் அமைப்பாளர் அதிவாரம் செந்தில், அனைத்து மத வழிபாட்டுத் தலங்களிலும் வேறு மதத்தினருக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதேபோன்றே இந்து ஆலயங்களிலும் கட்டுப்பாடுகள் உள்ளன. அதுமட்டுமன்றி, பழனிக் கோவில் சுற்றுலாத் தலமல்ல. நமது பூசையில் மற்ற மதத்தினர் பங்குபெறுவதை நாம் விரும்பவில்லை.

முஸ்லிம் அல்லாதவர்கள் மக்காவிற்குள் நுழைய முடியாதது போலவே இந்துக் கோவில்களிலும் கட்டுப்பாடுகள் உள்ளன. மத ஸ்தலங்களைக் காட்சிப் பொருளாகப் பார்க்கக் கூடாது. இந்துக் கோவில்களுக்குள் புர்கா தடை செய்யப்பட்டுள்ளது, என்று கூறியிருக்கிறார்.

இதேவேளை, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்து ஆலயங்களை வழிபடுவதற்கு எந்த வரம்பும் இல்லை, என தமிழக இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு கூறியுள்ளார்.

இந்துக்கள் அல்லாதவர்கள் கூட ஆலய வளாகத்திற்குள் நுழைவதை யாரும் தடுக்க முடியாது, என்று கடந்த ஆண்டு வழக்கொன்றில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சர்வாதிகாரி போல செயல்படுகிறார் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன்

### முன்னாள் முதல்வர் குற்றச்சாட்டு



புதுச்சேரியின் முதல்வர் ரங்கசாமியின் அதிகாரத்தை துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் என்று அந்த மாநிலத்தின் முன்னாள் முதல்வர் நாராயணசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர், மத்தியில் மோடி அரசு, மாநிலங்களின் அதிகாரத்தைப் பறித்து நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் ஒரு பகுதியாகத்தான் மருத்துவப்படிப்பிற்கு பொதுக்கலந்தாய்வு முறையைக் கொண்டு வருகிறார்கள். அந்தந்த மாநிலங்களில் உள்ள மாணவர்கள் அங்கேயே மருத்துவக் கல்லூரியில் சேரும் வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

அதே போன்று செவிலியர் படிப்பிற்கான நுழைவுத் தேர்வை நடத்துகிறது மத்திய அரசு. இதிலிருந்தே, மாநிலங்களின் உரிமை பறிக்கப்படுவது தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

இது குறித்து தமிழக முதல்வர், குரல் கொடுக்கிறார். ஆனால், புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி பேச மறுக்கிறார். ரங்கசாமியின் அதிகாரத்தை துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் பறித்துள்ளார். அதன் வெளிப்பாடாக, 'முதல்வர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை' என அழுது புலம்புகின்றார் ரங்கசாமி. இது கபட நாடகமாகும், என்று தெரிவித்திருக்கிறார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் புதுச்சேரி முதலமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. புலம்ப வேண்டியதில்லை. சர்வாதிகாரி போல தமிழிசை சௌந்தரராஜன் செயலபட்டு புதுச்சேரி நிர்வாகத்தைச் சீர்குலைக்கிறார். ஆளத்தகுதியில்லை என்றாலோ, ஆள முடியவில்லை என்றாலோ முதல்வர் ரங்கசாமி அமைச்சரவையை ராஜினாமா செய்து விட்டுப் போக வேண்டியது தானே?, என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

புதுச்சேரி நகர அமைப்புக் குழுவின் அனுமதியில்லாமல் பத்திரப்பதிவு நடைபெறுகிறது. கோயில் நிலங்கள் அரசு நிலங்கள் போன்றவற்றை போலியாகப் பத்திரப் பதிவு செய்து ஆட்சியாளர்கள் மோசடி செய்து வருகின்றார்கள்.

இதை முதல்வர் ரங்கசாமி விசாரிக்க வேண்டும். இல்லையெனில் சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இல்லையென்றால் காங்கிரஸ் கட்சி சார்பில் சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிடக்கோரி மத்திய உள்துறை அமைச்சரைச் சந்தித்து வலியுறுத்துவோம்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## நண்பருக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கூற முகநூல் நேரலை சிறைக் கைதியின் காணொளியால் பொலிஸார் அதிர்ச்சி

பஞ்சாப் மாநிலத்திலுள்ள பிரோஸ்பூர் மத்திய சிறையில் உள்ள கைதி ஒருவர் தனது நண்பரின் பிறந்த நாளின் போது அவரை வாழ்த்த சிறையில் இருந்து கொண்டே பேஸ்புக் லைவ் வீடியோவில் இணைந்தமை பரபரப்பையும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

சமூகவலைத் தளங்களில், அந்தக் கைதியின் காணொளி வேகமாகப் பரவிய நிலையில் கைதிக்கு எதிராக மேலும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து காவல்துறையினர் கூறுகையில், இச்சம்பவம் நடந்த பின் இரு கைப்பேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சிறையில் இருந்து நேரலையில் பேசிய கைதி மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைச் சட்டப்பிரிவு 42 இன் கீழாக, இச்செயலில் ஈடுபட்ட அமன்குமார் என்ற கைதி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பஞ்சாப் பிரோஸ்பூர் மத்திய சிறையில் கைப்பேசி விவகாரம் பூதாகரமாவது இது முதன்முறை அல்ல. கடந்த ஆண்டு ஜூன் மாதம் பஞ்சாப்பின் பிரபல பாடகர் சித்து மூஸ்வாலா கொல்லப்பட்டார். இவ்வழக்கை விசாரித்த காவல்துறையினர், மூஸ்வாலாவைக் கொலை செய்தவர்களுக்கும் சிறையில் இருந்த சிலருக்கும் தொடர்பு இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

இதனைத் தொடர்ந்து சிறையில் நடத்தப்பட்ட சோதனையில் இரண்டு கைப்பேசிகளும் இரு சிம் கார்ட்களும் கண்டுபிடிக்கப்பட்டன. பஞ்சாப் சிறைகளில் கைதிகள் தங்களுடன் கைப்பேசிகளை வைத்திருப்பது பஞ்சாப் முழுவதிலும் தீவிர அரசியல் பிரச்சனையாகவும் உருவெடுத்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2023இல் வெளியிடப்பெற்றது.